பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

A/L 90
அக். 29இல் பிரிவு-II
Sat & Sun
ACC — மரியதாஸ்
3 — 4
ECO — சின்னத்தம்பி
4 — 5
COM — தேவா
5 — 6
GEO — வேலா
9 — 10
LOG — S S.மனோகரன்
10 — 11
POL. Sc. — மஃறூப்
11 — 12
Niru, Kondavil

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ 2/-

A/L 90
பிரிவு - II அக். 29இல்
PHY — சௌந்தி
(ஒளியியல்)
சனி. ஞாயிறு — 9-10
CHE — செல்வா
(பொது இரசாயனம்)
சனி ஞாயிறு — 8-9
BOT — பாலா
(அலகு - 2)
சனி. ஞாயிறு — 7-8
ZOO — ஞானம்
(இழையவியல்)
சனி, ஞாயிறு — 6-7
Niru Tuition Centre
Kondavil

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞு ஐப்பசி மீ 09 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 13 (25 - 10 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 218

### தெற்கில் 52 மணி நேர ஊரடங்கு; கொழும்பில் 18 மணி நேரம்

# ஊரடங்கை மீறுவோரை கண்டவுடன் சுட உத்தரவு!

## ஜே. வி.பியின் ஊர்வலத்தை தடுக்க அரசு முன்னேற்பாடு

கொழும்பு, அக்டோபர் 25

ஜே. வி. பி யினர் நாட்டின் தென்பகுதியில் நடத்த ஏற்பாடு செய்திருந்த கிளர்ச்சி ஊர்வலத்தை முறியடிக்கும் விதத்தில், அரசாங்கம் நாட்டின் தென்மாகாணத்திலும், கொழும்பு உட்பட மேற்கு மாகாணத்திலும் நேற்று நள்ளிரவு முதல் ஊரடங்கை அமுல் செய்துள்ளது.

ஊரடங்கை மீறுவோரைக் கண்ட இடத்தில் சுடுமாறு பாதுகாப்புப் படையினருக்குக் கண்டிப்பான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இன்றைய தினம் அரச எதிர்ப்புக் கிளர்ச்சி ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு ஜே. வி பி இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது இந்தக் கிளர்ச்சி ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனை முறியடிக்கும் விதத்தில் தெற்கு மாகாணத்தில் 52 மணி நேர ஊரடங்கும், கொழும்பு உட்பட மேற்கு மாகாணத்தில் 18 மணி நேர ஊரடங்கும் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

அடுத்த 24 மணித்தியாலங்களில் சகஜ நிலைமையைக்குழப்பச் சில சக்திகள் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம்—

தென்மாகாணத்தில் இன்று நள்ளிரவு 12மணி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறைக்கு புதிய முறையில் ஆசிரியைகள் நியமனம்!

கொழும்பு அக் 25

அம்பாறைக்கு ஆசிரியைகள் நியமனம் புதிய முறையில் நடைபெறப் போகிறது. நூற்றி ஐம்பது இளம்பெண்கள் முதலில் ரிசேர்வ் பொலீஸ் படைக்குச் சேர்க்கப்பட்டு பின்னர் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியைகளாக நியமிக்கட படுவர்.

இப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் கட்டுப்பாட்டை நீக்க இந்தநடவடிக்கையை அம்பாறை இராணுவ இணைப்பு அதிகாரி லெப்டினன்ட் கேர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### குழப்பும் நடவடிக்கை தொடர்ந்தால்

## ஐ.தே.க.கூட்டங்கள் தடுத்து நிறுத்தப்படும்

### எதிர்க்கட்சித்தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, அக் 25

சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டங்களைக் குழப்புவதை ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்தாவிட்டால் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அவர்களின் சகல கூட்டங்களையும் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எதிர்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா பதுளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு எச்சரிக்கையை விடுத்தார்

திரு. பண்டார

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. அலுவலகம் மீது குண்டுவீச்சு; 4பேர் பலி; 40பேர் காயம்

கொழும்பு, அக். 25

கொட்டாஞ்சேனையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்துக்கு குண்டு வீசப்பட்டதில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். சுமார் 40 பேர் காயமடைந்தனர்.

நேற்று மாலை இச்சம்பவம் நடைபெற்றது.

கட்சிக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இரண்டு குண்டுகளும் வீசப்பட்டதால் நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

குண்டு வீச்சு நடந்த இடத்தைச் சுற்றிப் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இரண்டு பேர் துப்பாக்கிகள் சகிதம் வந்து குண்டுகளை வீசியதாக பொலீஸ் விசாரணையில் தெரியவந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஊரடங்கு குறித்து அரசு அறிவித்த சில மணி நேரத்தில் குண்டு வீச்சுச் சம்பவம் இடம் பெற்றது. (அ-எ)

## குடாநாடு முழுவதும் நேற்று ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், அக் 25

நேற்று, யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும், வழமையான அலுவல்கள் எதுவும் நடைபெறாமல் முற்றாக ஸ்தம்பித்திருந்தது.

வெள்ளியன்று படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு க. சிவானந்தசுந்தரத்தின் இறுதி யாத்திரையை முன்னிட்டு நேற்றைய தினத்தை பூரண துக்க தினமாக அனுஷ்டிக்க பல அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருந்தன. அதை அடுத்து குடாநாடு முழுவதும் ஸ்தம்பித நிலையை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்குத் தமிழர்களை ஆள்வதற்குச் செல்லவில்லை

### இப்படிச் சொல்கிறார் புதிய ஆளுநர் ஷெல்டன்

கொழும்பு, அக 25

வடக்கு, கிழக்குத் தமிழர்களை நான் ஆள்வதற்குச் செல்லவில்லை; அவர்களுக்குச் சேவை புரியவே விரும்புகிறேன்.

இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஷெல்டன் ரணராஜா பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்த முடியாவிட்டால்... மாற்று வழி எதையும் என்னால் காணமுடியாதுள்ளது

மாகாணசபைச் சட்டத்தின் படி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அமைதிஒப்பந்தத்தின் படி தேர்தல் நடத்த அந்த மாகாணத்தில் அமைதி இருக்க வேண்டும்.

தேர்தல் நடத்தக் கூடிய சூழ் நிலை நிலவுகிறது என்று இந்திய அரசு கூறுகிறது.

கடந்த ஆண்டிற்குப் பின்னர் நான் அங்கு (யாழ்ப்பாணம்) போகாததினால் இது பற்றி நான் ஒன்றும் கூறும் நிலையில் இல்லை

அமைதியான தேர்தலை நடத்த முடியும் என நான் நம்புகின்றேன். மாகாணசபை அமைக்கப்பட்டவுடன்

(6ம் பக்கம் பார்க்க)

## தேர்தலை ஒத்திவைக்கும் பேச்சுக்கே இடமில்லை

### தமிழக ஆளுநர் அறிவிப்பு

சென்னை, அக் 25

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் நிச்சயமாக ஜனவரியில் நடக்கும். அதனை மேலும் ஒத்திப்போடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

தேர்தல் ஆணையாளரோடு கலந்தாலோசித்து தேர்தலுக்கான திகதி விரைவில் நிர்ணயிக்கப்படும்.

இவ்வாறு தமிழக ஆளுநர் திரு. பி. அலெக்ஸாண்டர் நேற்றுத் தெரிவித்தார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்துச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. அலெக்ஸாண்டர் இத் தகவல்களை வெளியிட்டார்.

இதேவேளை தமிழ் நாடு தேர்தலில் போட்டியிடுவது சம்பந்தமான அலுவல்களைக் கவனிக்கவென 5 பேர் கொண்ட விசேட குழு ஒன்றை இந்திரா காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டி நேற்று நியமித்தது. (அ)

## பல்லாயிரம் மக்கள் கண்ணீர் மல்க சிவானந்தசுந்தரத்தின் பூதவுடல் தீயுடன் சங்கமம்

வடமராட்சி, அக் 25

படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் அமரர். க. சிவானந்தசுந்தரத்தின் பூதவுடல், நேற்று மாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை திக்கம் முனைத் திடலில் பல்லாயிரக் கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலியின் மத்தியில் தீயுடன் சங்கமமானது.

இதற்கு முன் அவரது பூதவுடல் வடமராட்சியின் முக்கிய பகுதிகள் ஊடாக இறுதி யாத்திரைக்கு எடுத்து வரப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை சுட்டுக் கொலைப்பட்ட தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவரின் பூதவுடல் நேற்றுக் காலை வரை பருத்தித்துறை கந்தரோடையார் ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை 9 மணிக்கு வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்

(6ம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

25- 10 - 1988
ஐப்பசி - 09
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10-33முதல் 12-03வரை
ராகுகாலம்:-
03-03முதல் 04-33வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திருமூலர் குருபூஜை

## வடமராட்சியில் நேற்றும் ஹர்த்தால், துக்கதினம்

வடமராட்சி, அக் 25

வடமராட்சிப் பகுதியில் மூன்றாவது நாளாக நேற்றும் ஹர்த்தாலும் துக்கதினமும் அனுஷ்டிக்கப்பட்டன.

தமிழ்ஈழம் மக்கள் மன்றத்தின் தலைவர் அமரர் சிவானந்த சுந்தரத்தின் மறைவை அடுத்தே கடந்த 3 தினங்களாக ஹர்த்தாலும் துக்கதினமும் அனுஷ்டிக்கப்பட்டன.

நேற்றும் வடமராட்சியில் சகல பகுதிகளிலும் கறுப்புக்கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டு ஆங்காங்கே சோககீதங்களும் இசைக்கப்பட்டன.

இதேவேளை அமரர் சிவானந்தசுந்தரத்துக்கு அஞ்சலி செலுத்தும் விதத்தில் வடமராட்சியின் முக்கிய இடங்களான கரவெட்டி, சம்பந்தர்கடை, இராசகிராமம், நாவலர்மடம், மூத்தவிநாயகர் கோவிலடி ஆகிய இடங்களில் மரியாதை வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இதனிடையில் இன்று முதல் வடமராட்சியில் நிலைமை வழமைக்குத் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ-70-9)

## டாக்டர்கள் எவ்வேளையும் வேலை நிறுத்தம் செய்யலாம்

யாழ்ப்பாணம், அக் 25

இம்மாதம் 27 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த நேரத்திலும் டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்யும் நிலைமை ஏற்பட்டு இருப்பாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

டாக்டர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படாத பட்சத்தில் இத் திடீர் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படலாம் என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் டபிள்யு. எம். எஸ். ரத்னப்பிரியா தெரிவித்தார்.

வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அவசரக் கூட்டம் ஒன்று இம் மாதம் 28 ஆம் திகதி நடைபெற உள்ளது.

(ஒ-எ)

### முச்சந்தி முரளி



உப்பிடிச் சொல்லிச் சொல்லித்தான் ஒத்தி வைக்கிறது உவையின்ரை வழக்கம். ஏதோ பொறுத்திருந்து பாப்போமே...!

## கோண்டாவிலில்-பெரும் எண்ணிக்கையில் ஆயுதபாணி முகமூடியர் கொள்ளை!

### கொக்குவிலில் - மக்கள் சேர்ந்து விரட்டினர்!!

கொக்குவில், அக். 25

ஆயுதங்கள் சகிதம் பெரும் எண்ணிக்கையில் ஒரே கோஷ்டியாக வந்த முகமூடிக் கொள்ளையர்கள் கோண்டாவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு பெரும் கொள்ளைகளை நடத்தினர்.

கொக்குவிலிலும் அதே போன்ற கொள்ளைக் கோஷ்டி தனது கைவரிசையைக் காட்ட முயன்றது எனினும் மக்கள் சேர்ந்து விரட்டி அடித்தனர்.

இம்மாதம்23 ஆம் திகதி இரவு ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் நடந்த கொள்ளை, கொள்ளை முயற்சிச் சம்பவங்கள் குறித்து அறிய வருவதாவது:-

சம்பவதினம் இரவு சுமார் 7 30மணியளவில் கோண்டாவில்நவரட்ணராஜா வீதியில் சுமார் நாற்பது முதல் ஐம்பது பேர் அடங்கிய ஆயுதம் தரித்த இனந்தெரியாத முகமூடியர் கோஷ்டி ஒன்று திடீரென்று பிரவேசித்தது.

அந்தக் கோஷ்டி அங்குள்ள சுமார் நான்கு வீடுகளுக்குள் புகுந்து ஆயுதங்களைக் காட்டி வீட்டிலிருந்தவர்களைப் பயமுறுத்தி நகை, பணம் முதலியவற்றைக் கொள்ளையடித்துச் சென்

(6ம் பக்கம் பார்க்க)

## ஆவரங்காலில் சூட்டுச் சம்பவம்

ஆவரங்கால் பகுதியில் நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தில் சிலர் காயமடைந்தனர் எனவும் சொல்லப்பட்டது

இதேவேளையில்நேற்று நவிண்டில் பகுதியில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார் (9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கோதீவு - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள குழாய்க் கிணறு, மின்சார வசதியுடனான வீட்டுடன் 2½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விலாசம் K. அரியராசா நாவற்குழி கிழக்கு (மகாவித்தியாலத்திற்கு அண்மையில்) தச்சன் தோப்பு, தொடர்பு. K. அரியராசா, 302, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (7361)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின், சாப்பாட்டு மேசை. Hall set மேசை. Showcase Type writter, கண்ணாடி மேசை, Black & Decker Drill Pram Stainless Steel Zink கட்டில் மெத்தைகள், PressureCocker மற்றும் பொருட்களும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 122, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (7435)

BAIRAHA FARMS HYBRO, CHRISTOMBU FARM HUBBARD. புரொயிலர் குஞ்சுகள் 100க்கு மேல் விலை 16/-, தேவையான தொகை முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7441)

பிறிமா இன ஒருநாள் முட்டையிடும் வெள்ளை, சிவப்பு கோழிக் குஞ்சுகளும், புரோயிலர் மற்றும் சேவல் குஞ்சுகளும் 22-10-88 முதல் விநியோகிக்கிறோம். தேவைப்படுவோர் உடன் பெற்றுக்கொள்ளலாம் M.G.M. Foroge Stores No: 208, 1st Cross st- Jaffna. (7428)

Golden Comet 4½ மாத பேட்டுக் கோழிகள் (Point of Lay) புதன்கிழமையும் 3½ மாத பேட்டுக் கோழிகள் வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும் சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7440)

### மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre கோழிக்குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். (6488)

### தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

## தேவை

ஆண்டு 5இலும் ஆண்டு 2இலும் படிக்கும் அச்சுவேலியில் இருக்கும் இரு பிள்ளைகளுக்கு கிழமையில் 5 - 6 நாட்கள் 1½-2 மணித்தியாலம் வீட்டிற்கு வந்து பாடம் சொல்லிக் கொடுக்க ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம் விபரங்களுடன் எழுதுக விளம்பர இல. 2 C/o உதயன். [7432]

## சேவை

பாஸ்போட், பொண்டிங், றிஹூவல் ஆகியவற்றை துரித கதியில் செய்து கொள்ள, SELVAA ELECTRONIC CORP. Momsac Building, 11, Stanley Road, Jaffna என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (7603)

## காணவில்லை

16 - 10 - 88இல் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அகதியாக வந்த எனது பாஸ்போட் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுக்கள் அடங்கிய பிறவுண் பொதி காணாமல் போய்விட்டது. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் (7431)

## வகுப்புகள்

G S. Q (Bio and Maths 1990) Stenography and Home Science (Diploma) வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன 15-11 88 முன் விண்ணப்பிக்கவும். Course in Pharmacy (I year) நடைபெறுகின்றது. விபரங்களுக்கு அதிபர், உயர்கலைக்கல்லூரி (The College of Studies 73, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (7425)

### SPOKEN ENGLISH

புதிய பிரிவு தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்காக. ஆரம்பம்: 03 - 11 - 88 நேரம் பகல் 10-30, 12 30 செவ்வாய், வியாழன் நாட்களில் மட்டும் S B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7439)

### O/L ENGLISH

பழைய பாடத்திட்டத்திற்கமைய ஒருமாதகால (Paper Class) பயிற்சி வகுப்பு ஆரம்பம்: 03-11-88 தொடர்பு S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7438)

### ஆண்டு 11 இலத்திரனியல்

திருத்திய இரண்டாம் பதிப்பு இலத்திரனியல் புத்தகம் முழு விபரங்களையும் உள்ளடக்கி, வினா-விடையுடன் கூடியதாக விற்பனையாகிறது. விநியோகஸ்தர்கள்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்நகர். [7429]

### A/L 90 இரசாயனம்

108 Brown Road, A/L 90 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் (26 - 10 - 88) புதன் 6 30 a.m திங்கள், புதன், வெள்ளி 6. 30 a.m - 7. 45 a m (7604)

---

கிளிநொச்சி மாவட்டத்தில்

# ஊட்டச் சத்துக் குறைவினால் தாய்மார், குழந்தைகள் இறக்கின்றனர்

## போஷாக்கு கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், அக் 25

"தாய்மாருக்கான போஷாக்குக் கருத்தரங்குகள் பின் தங்கிய பகுதிகளில் நடத்தப்படவேண்டும். கிளிநொச்சிப் பகுதியில் ஊட்டச்சத்துக் குறைவினால் தாய்மார்களும், குழந்தைகளும் இறக்கின்றனர். ஆகவே வைத்திய அதிகாரிகள் தாய்மார்களுக்குத் தேவையான திரிபோஷா, மருந்து வகைகள் ஆகியவற்றைக் கிராமங்கள் தோறும் விநியோகிக்க வேண்டும்"

ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற தாய்மாருக்கான போஷாக்குக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. செ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ந சோமசுந்தரம் கருத்தரங்கில் தலைமை வகித்தார்.

தேசிய உப்புக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை பேசுகையில் இப்போது உள்ள கஷ்டமான காலகட்டத்தில் பயன் தரக்கூடிய கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்த அதிகாரிகளும் அதில் பங்கு பற்றிய டாக்டர், சுகாதார பரிசோதகரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

கூட்டுத்தாபன ஊழியர்களின் சுகாதாரத்துக்காக வேண்டிய தேவைகளைப் பூர்த்திசெய்வேன் என உறுதி கூறுகிறேன். இப்படி அவர்கூறினார்.

தேசிய உப்புக் கூட்டுத்தாபன முகாமையாளர் திரு கே. தங்கராசா, கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சிவகுமார் சுகாதார பரிசோதகர் திரு. எஸ் இராசேந்திரா ஆனையிறவு வைத்திய அதிகாரி டாக்டர் சண்முகராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். (ச)

## தகவலுக்கு சன்மானம்

குருநகர் புதிய சந்தை (சின்னக்கடை) யின் உள்ளும், புறமும் உள்ள கடைகள் சமீப காலத்தில் உடைக்கப்பட்டு திருட்டுக்கள் நடைபெற்று வருவதை நிறுத்த புதிய சந்தை வர்த்தகர்கள் சங்கம் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது

நடைபெற்று வரும் திருட்டுக்கள் சம்பந்தமான இரகசிய தகவல்களைத் தந்துதவுவோருக்கு சன்மானம் வழங்கப்படுமென்ற அறிவித்தலை குருநகர், புதிய சந்தை வர்த்தகர்கள் சங்கம் விடுத்துள்ளது. (ஒ-51)

மாகாணசபைத் தேர்தலில்

# முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது ஏன்?

கல்முனை அக் 25

"தமிழர் முஸ்லிம் சமூகங்களின் உண்மை நிலையை உலகுக்கு உணர்த்தி பரிகாரம் தேடவே முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு—கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களில் போட்டியிடுகிறது.

இம் மாவட்டங்களில் முஸ்லிம்களின் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு இடமுண்டு. போட்டிகளில் நாம் கலந்து கொள்ளாவிட்டால் வடக்கு-கிழக்கு மாகாண சபை ஓர் ஓரங்க நாடகமாக இருந்து விடும்.

தமது சொல்லுக்குத் தலையாட்டக் கூடிய ஒரு பொம்மை ஆட்சியை இந்தியா உருவாக்கியுள்ளதென்ற குற்றச்சாட்டிலிருந்தும் இந்தியா தப்பமுடியாமல் போயிருக்கும் அத்தோடு இந்தப் பொம்மை ஆட்சியில் முஸ்லிம்களின் உண்மையான குரல் ஒலித்திருக்க முடியாது.

தமிழர் சமூகத்தின் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப்புலிகளின் நியாயங்களும் கோரிக்கைகளும் கொச்சைப்படுத்தப்பட்டிருக்கும்.

அது மாத்திரமன்றி கடந்த 7ஆம் திகதி அரசாங்கம் ஒரு சில அரசியல் கட்சிகள் மாத்திரம் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கியது. இதன் மூலம் முஸ்லிம்களின் உரிமைக்குரலான முஸ்லிம் காங்கிரஸை இத்தேர்தலில் போட்டியிடாமல் செய்யலாம் என்றும் அரசாங்கம் கருதியது.

இறுதிநேரத்தில் அதாவது 10ஆம்திகதி ஐ தே. கட்சி கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதன் மூலம் தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் அத்தேர்தலில் முஸ்லிம் சமூகம் தமிழ் கட்சிகளுக்கெதிராக ஐ. தே. கட்சியை பலவந்தமாக தேர்ந்தெடுக்கும் என்று அரசாங்கம் நம்பியது.

அத்தகைய சூழலில் முஸ்லிம் காங்கிரஸுக்கு முஸ்லிம்களுக்கு மத்தியில் இடமில்லை என்பதை நிரூபிப்பதற்கும், ஐ. தே. கட்சிதான் முஸ்லிம்களின் குரல் என்பதை ஜனாதிபதி தேர்தலிலும்-எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் எடுத்துக் காட்டவும் அரசாங்கம் எண்ணியிருந்தது.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் அபிலாஷைகளை சேர்த்துக் கொள்ளாமல் அவர்களைக் காட்டிக் கொடுத்து-நிரந்தர அடிமைகளாக்கிய அரசின் திட்டங்களை முறியடிக்கக் கூடிய எமக்குள்ள ஒரேவழி தேர்தலில் போட்டியிடுவதே ஆகும். இந்த நிலைமைகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தையும் காப்பாற்றவே முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுகிறது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வாழ்க்கையைச் சரியாக நெறிப்படுத்துவது கல்வி

கோப்பாய், அக் 25

மனித வாழ்க்கையைச் சரியாக நெறிப்படுத்துவது கல்வியே. எனவே மாணவர்கள் தமது கல்வியில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

கோப்பாய் மலைமகள் கல்வி நிலையத்தில் நடைபெற்ற வாணி விழாவில் உரையாற்றிய மலைமகள் கல்வி நிலைய நிர்வாகி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையற்றுகையில் ஒருவனுக்கு எவ்வளவு செல்வம் இருந்த போதிலும் அவன் அதை சரியான வழியில் நெறிப்படுத்தி செலவு செய்ய கல்வி அறிவு அவசியமாகும்.

மாணவர் பிராயம் கல்வி அறிவை வளர்க்க ஒரு சிறந்த பராயம் மேலை நாடுகளில் கல்வி கற்பதற்கு வயது நிர்ணயிக்கப்படுவதில்லை. கல்வி ஒரு கடல் அதனை நாம் எமது வாழ் நாளிலேயே கற்று முடிக்க முடியாது

இப்படி அவர் கூறினார். (இ-72)

## தையல் பயிற்சி

தொழில் திணைக்களத்தின் ஆதரவுடன் 27 பெண்களுக்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் தையல் பயிற்சி வழங்கப்பட்டுவருகிறது. இப் பயிற்சிக்கு பொறுப்பாக உள்ள ஆசிரியை செல்வி புனிதவதி தம்பிராசா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

சித்தங்கேணி, தொல்புரம், வட்டுக்கோட்டை, சுழிபுரம், சங்கரத்தை ஆகிய கிராமங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டோருக்கே தற்போது பயிற்சி அளிக்கப்படுகிறது [உ-90]

# நாட்டுக்கு ஆற்றிய சேவை தன்னலமற்ற தியாகமே மக்கள் மனதில் பதியும்

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், அக் 25

"ஒருவர் தனது சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஆற்றிய சேவையும் தன்னலம் அற்ற தியாகமும் தான் அவரை மக்கள் தம்மனதில் பதிய வைப்பதற்குரிய காரணமாகும்

அந்த வகையில் அமரர் குமாரசாமி நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முதல் தலைவராகச் சேவையாற்றியது மட்டுமன்றி பெரிய கட்டிடத்தைத் திட்டமிட்டுக் கட்டியதன் மூலம் மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார்"

அமரர் ந. குமாரசாமி அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் அவரது படத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

அமரர் ந. குமாரசாமியின் உருவப்படம் அவரது இல்லத்தில் இருந்து நெறியாளர்களாலும், பணியாளர்களாலும், பொதுச்சபை உறுப்பினர்களாலும் ஊர்வலமாக சங்க மண்டபத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நல்லூர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவரினால் திறந்து வைக்கப்பட்டது.

திரு. கனகசபாபதி தனது உரையில் மேலும் கூறியதாவது:

திரு. குமாரசாமி நல்லூரில் சிக்கன சேமிப்புத் திட்டத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தி மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தார்.

அவர் தலைவராக இருந்த காலத்தில் பணியாளர்களுடன் நல்ல கடமை உணர்வைத் தோற்றுவித்து. சங்கம் லாபகரமாக இயங்க வழிவகைகளைக் கையாண்டார்.

இப்படி அவர்கூறினார்.

பிராந்தியக் கூட்டுறவு அதிகாரி திரு மயில்வாகனம், முன்னைநாள் தலைவரான திருவாளர்கள் குமாரசாமி, கே. [illegible] ஆகியோரும் உரையாற்றினர். (ச)

## கடவுச்சீட்டு யாருடையது?

யாழ்ப்பாணம், அக் 25

ஐயம்பிள்ளை பாலகுமாரன் என்பவருடைய கடவுச்சிட்டு (பாஸ்போர்ட்) கண்டெடுக்கப்பட்டு உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது

உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும். (ஐ)

# ஆசிரியர் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடவே கருத்தரங்கு

சுன்னாகம், அக். 25

காலத்திற்குக் காலம் ஏற்படும் பிரச்சினைகளை அறிந்து அவைகளுக்குப் பரிகாரம் தேடவே கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

அந்த வகையில் ஆரம்ப கீழ்ப்பிரிவு வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்கேற்பட்டுள்ள இடர்பாடுகளைக் கலந்து பேசுவதற்காக இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

கல்வி அதிகாரி திரு. க. புலேந்திரன் மாலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஒன்றிணைப்புக் கல்வி சிறந்த இலக்கை அடைவதாக எதிர்பார்க்கப் பட்டுள்ளது.

அதனாலேயே தற்போதும் அம்முறைக்கல்வி ஏற்பட்டுள்ளது

உடல், உள ரீதியான வளர்ச்சி அடைவதில் ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

கல்விக்கான சரியான அத்திவாரமிடும் பணி ஆரம்பவகுப்பு ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கிஉள்ளது.

பின் தங்கிய நிலையிலிருக்கும் மாணவர்களை மேம்படுத்த எம்மாலான சகலதையும் செய்ய வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (ச 27)

## ஏழாலையில் மின்சாரக் கோளாறு

சுன்னாகம், அக்.25

அண்மைக் காலமாக அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் ஏழாலைப் பகுதியில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சக்தி குறைந்த டிரான்ஸ்போமர் செயல்படுவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-27)

## நூல் அறிமுக விழா

கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் விசேஷ பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து "சைவ விரதங்களும் விழாக்களும்" என்ற நூல் அறிமுக விழா நடைபெற்றது

கோப்பாய் - சிவம்' எழுதிய இந்நூலை சைவப் புலவர் க. குமாரசாமி அறிமுகம் செய்து உரையாற்றினார்.

பரிபாலன சபைத் தலைவர் த. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம குருக்கள் ஆசியுரையும். நூலாசிரியர் நன்றியுரையும் வழங்கினார். (ச)


## பியோன் தேவை

அச்சகம் ஒன்றிற்கு பியோன் தேவை. 18 வயது தொடக்கம் 25 வரையானோர் விண்ணப்பிக்கலாம். வேலை நேரத்தில் இன்று அல்லது நாளை விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

இல. 15, இரண்டாவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C-415)

## சமையற்காரர் தேவை

ஸ்தாபன ஊழியர்களுக்கு சமைப்பதற்கு சமையற்காரர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வேலை நேரத்தில் இன்று அல்லது நாளை நேரில் வரவும்.

இல. 15, இரண்டாவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C-416)

## THE JAFFNA EDUCATION CENTRE

JAFFNA.

[சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்]

இங்கு வருடம் 6, 7, 8, 9, 10, O/L, A/L ஆகிய வகுப்புகளும், தையல் வகுப்புகளும்,
"Spoken English
Short - Hand and Typing
ஆகிய வகுப்புக்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

'பெண்கள் விடுதியும் உண்டு'

பெண்கள் விடுதியில் சேர விரும்புவோர், 1 11-88-க்கு முன் வந்து சேரவும். [7546]


## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி இராசம்மா தில்லையம்பலம்**

[இளைப்பாறிய அதிபர்
இ. த. க. பாடசாலை, பாலாவோடை]

ஆண்டவன் படைப்பு: 07-03-1930
அழிப்பு: 06-11-1987

திதி: 25 - 10 - 1988

அன்பின் உருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் வழி நடத்திய தெய்வமே! குடும்பத்தின் ஒளி விளக்கே, குலவிளக்கின் மாணிக்கமே எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் என்றும் உன் நினைவு அழியாதம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவில் வாழும்

**அன்புக் கணவன், பிள்ளைகள்,**
**பெருமக்கள், சகோதரர்கள்,**
**உற்றார், உறவினர், நண்பர்கள்.**

விளானை, களபூமி,
காரைநகர்.

தகவல்: பிள்ளைகள் [7442]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

J. M. J.

உங்கள் பயண அமைப்பாளர்




★ கனடா ★ ஜெர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிஸ் ★ இத்தாலி

ஷை நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமது குழுக்கள் பிரதி வாரமும்

**கனடா, ஜெர்மனி, பிரான்ஸ்**

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன் அழைக்கின்றேன்.

● முக்கிய குறிப்பு:
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்:

**S.P. ANTON**

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 651)


# தமிழை வளர்த்து வருகிறது முஸ்லிம் சமூகம்

## ஒஸ்மானியாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம் அக் 25

இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் தமிழை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். பருத்தித்துறையில் இருந்து தெய்வேந்திர முனைவரை இவர்களால் தமிழ் வளர்க்கப்படுகின்றது.

யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் இவ்வாறு கூறினார்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி பரிசளிப்பு விழா கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஜனாப் எ. எச் எம். ஹமீம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக ஒஸ்மானியாக் கல்லூரி ஆரம்பகால அதிபர் ஜனாப் சி எம். எ. ஜிப்றி கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திரு வெற்றிவேலு சபாநாயகம் வெள்ளி விழா மலரை வெளியிட்டு வைத்து உரைநிகழ்த்தினார்.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களுக்கான ஒரே ஒரு மகாவித்தியாலயம்என்ற பெருமை ஒஸ்மானியாவையே சாரும்.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பங்களிப்புடன் இதைச்சூழவுள்ள சமூகத்தினது பங்களிப்பும் கணிசமானதாக இருப்பது பாராட்டுக்குரியது என்றார் அவர்.

கல்லூரி அதிபர் ஜனாப் ஹமீம் தனது உரையில்-

இன்றைய வைபவத்தின் பெருமையை வெளித் தோற்றத்தில் மட்டும் மதிப்பிடாது உள்ளார்ந்த இலட்சியங்களை மையமாகக் கொண்டு சிந்திக்க வேண்டும்.

கல்வி நுாச்சியின் பூரணத்துவத்தை சிறுவர்களைப்பெறவிடாது இடைமறிக்கும் போக்கானது எமது கல்லூரியை மட்டுமின்றிமுழுச் சமூகத்தையுமே பாதிக்கின்றது. இது ஒருகசப்பானஉண்மையாகும். இந்தக் குறைபாட்டிற்குரிய பிரதான பொறுப்பு பெற்றோரையே சாரும் என்று கூறினார்.

ஜனாப் எம். எம். யூசுப், ஜனாப் எம். எம். எ. குத்தூஸ் ஜனாப் எம். எ.ஆர். றஹீம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாககலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்கள்.

வெள்ளி விழா மலரின் முதற்பிரதிகளை அல்ஹாஜ் எம் எல். அப்துல் காதர், ஜனாப் எம். எம். மன்சூர், ஜனாப் கே. முத்து மூஹம்மது ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (உ-5)

## வீட்டில் கொள்ளையிட்டுவிட்டு தேநீர் அருந்திச் சென்ற ஆயுதபாணிக் கொள்ளையர்!

காங்கேசன்துறை, அக் 25

ஊரடங்கு நேரம் அயலவரின் உதவியுடன் வீடொன்றினுள் புகுந்து தப்பாக்கி ஏந்தியகொள்ளையர்கள் அங்கிருந்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ரயில்வே பகுதி பிரதம பாதுகாவலர் இளையதம்பி நடராசா என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளை இடம் பெற்றுள்ளது.

கடந்த திங்கள் இரவு 9 மணிபோல் அயலவர் ஒருவர் அழைத்ததை அடுத்து திரு. நடராசா தனது வீட்டுக் கதவைத் திறந்தார்.

துப்பாக்கி ஏந்திய மூன்று இளைஞர்கள் வீட்டினுள்ளே புகுந்தனர்.

அதிகாலை 4 மணிவரை அந்த வீட்டிலேயே தங்கியிருந்த கொள்ளையர்கள் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து உடைமைகளையெல்லாம்கிளறி எறிந்து பணம், நகை, டெக், சைக்கிள், எவர் சில்வர் பொருள்களை கொள்ளையடித்தனர்.

இரு தடவைகள் அவ்வீட்டில் தேநீர் தயாரித்துக் குடித்த கொள்ளையர்கள் 'சாப்பாட்டுக்கு வழியில்லாத நிலையிலேயே தாம் இப்படிக் கொள்ளையடிப்பதாக' வும் வீட்டுக்காரரிடம் கூறினராம்.

அதே தினம் மயிலிட்டி வடக்கில் மற்றுமொரு வீட்டிலும் கொள்ளையர்கள் புகுந்து அங்கு சாப்பாடும் வாங்கிச் சாப்பிட்ட பின்பு பொருள்களைக் கொள்ளையடித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-ச 68)

## திணைக்களத்திற்கு 3மாடிக்கட்டடம்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்குமூன்று மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதியை கல்வி அமைச்சு வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

ஆரம்பவேலைகளுக்கென 20லட்சம்ரூபாவை கல்வி அமைச்சு வழங்கி இருப்பதாகவும்.

கட்டட வேலைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் எனவும் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-90)

## உயரதிகாரிகளையும் ஊழியர்களையும் கவர்ந்தவர்

### வங்கி ஊழியர் பிரிவுபசாரத்தில் உரை

யாழ்ப்பாணம், அக். 25

திருவாளர் இரத்தினம் அவர்கள் கடின உழைப்பினால் உயரதிகாரிகளையும், அன்பினால் சக ஊழியர்களையும் தன்பால் கவர்ந்தவர்.

திரு க.மங்களமூர்த்தி உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை வங்கியில் 36 வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. அ. இரத்தினம் அவர்களுக்கு இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளை உத்தியோகத்தர்களினால் பிரிவுபசார வைபவம் ஒன்று நடத்தப்பட்டது.

வைபவத்திற்கு யாழ்ப்பாணக் கிளையின் பிரதான முகாமையாளர் திரு. க. திருநாவுக்கரசு தலைமை வகித்தார்.

திரு. மங்களமூர்த்தி தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் 'நேர்மையுடனும், திறமையுடனும் வங்கியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட திரு இரத்தினம் அவர்கள் இன்றைய தலைமுறையினருக்கு ஓர் முன்மாதிரியாக விளங்கியவர்' என்றார்.

திரு. ப ஞானசேகரன் பேசுகையில். திரு. இரத்தினம் உயர் பண்பினால் மக்கள் மனதில் குடிகொண்டவர்' என்றார்.

வங்கி ஊழியர்களால் திரு. இரத்தினம் அவர்களுக்கு பரிசு ஒன்று வழங்கப்பட்டது.

இறுதியாக திரு. இரத்தினம் நன்றியுரை நிகழ்த்தினார். (இ-5)

## கோப்பாயில் சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் அக- 25

யாழ். மாவட்ட சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி ஆராயும் கருத்தரங்கு நாளை புதன் கிழமை யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திபகலாநிதி என். கனகசபை தலைமையில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்ட தொற்று நோய்த்தடுப்பு நிபுணர், டாக்டர் கா. விஜயராஜா "தொற்று நோய்த் தடுப்பு முறைகள் பற்றியும், டாக்டர் திருமதி பொன்னம்பலம் சிறுவர் மனை சுகாதாரம் பற்றியும், டாக்டர் ஆர். தெய்வேந்திரம் எயிட்ஸ் நோய் பற்றியும் விரிவுரைகள் வழங்குவார்கள். (ச-18)

## இடம் பெயர்ந்தோருக்கு உணவு நிவாரணம்

### யாழ். நகரில் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம் அக். 25

முல்லைத்தீவு வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் வதியும் அகதிகளுக்கு இன்று செவ்வாய்க்கிழமை உணவு நிவாரணம் வழங்கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டப் பிரசைகள் குழுப் பொருளாளர் திரு மா. மகாலிங்கசிவம் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமது பெயர்களை ஏற்கனவே பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவில் பதிந்து கொண்டவர்கள் இன்று காலை 10மணிக்கு இல. 28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் (யாழ் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துக்கு அருகாமையில்) நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரிசி, சீனி, பருப்பு தாவரநெய், மண்ணெண்ணெய் ஆகிய பொருள்கள் வழங்கப்படவுள்ளதால் இவற்றை எடுத்துச் செல்வதற்கான கொள்கலன்களையும் கொண்டு வருமாறு சம்பந்தப்பட்டோர் கேட்கப்பட்டிருக்கின்றனர். (உ)


**சிங்கர்**

விவசாய நீரிறைக்கும் இயந்திரம்
சேனை, வயல், இரத்தினக் கற் குழிகளுக்கு
முற்றிலும் உகந்தது

அதிக செயலாற்றல்
மணிக்கு 8250 கலன் இறைக்க வல்லது
செலவுச் சிக்கனம்
குறைந்தளவு எரிபொருளில் அதிக சேவை.
நீடித்த பாவனை
நவீன சிங்கர் தொழில்நுட்ப உற்பத்தி என்பதால் அதிக காலம் உழைக்கும். பெற்ரோல் அல்லது மண்ணெண்ணெய்யில் இயங்கும் 4 குதிரைச் சக்தி கொண்ட உலகப்புகழ்வாய்ந்த ஹொண்டா ஜீ. கே. என்ஜின் பொருந்தியது.
இரண்டு வடிவ அமைப்புகள் உள்ளன.
● எஸ். பி. 50 (மார்க் 2) விலை. ரூ: 11, 390/-
● என் எஸ். பி. 50 விலை: ரூ. 11,290/-
உதிரிப் பாகங்கள் நாடெங்குமுள்ள சிங்கர் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்



விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. துரிதமானது.

Minds/SA/8


2ஆவது ஜனத்திரள் வாரம்!
ஹரன் வெண் திரையில்!
தினசரி 10.30—2 30
★ கமலஹாசன் ★ சத்யராஜ்
(இரு வேடங்களில்)
● நளினிகாந்த் ● சுஜாதா
★ மனோரமா நடித்த
★ மங்கம்மா சபதம் ★
(ஈஸ்மன் கலர்)
மங்கம்மா பரம்பரையில் "ஓர் நவீன மங்கம்மா" கணவனுக்கிழைத்த துயரங்களை தனயன் மூலம் பழிவாங்கும் சபதம்.
(ஓர் குடும்பச் சித்திரம்)
(7545)

ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்
சவூதி அரேபியாவில் உடனடியாக
வேலைவாய்ப்பு
200 பேர் ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்
சம்பளம் 400 SR (ஆண்கள்)
வயது 21 — 48 வரை
ஒரு வாரத்தில் பயணம் செய்யலாம். கடவுச் சீட்டும் கடவுச் சீட்டையுடையதான மூன்று படங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
KUWAIT
30 பேர் சம்பளம் 35 K.D.
உடன் தேவை
இரண்டு மாதத்தினுள் பிரயாணம் செய்யலாம்
Please Contact:
T. V. TRAVELS & TOURIST
BROWN ROAD,
Railway Station (Front)
KOKUVIL
(C662)

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான
கம்பியூட்டர் கல்வி
● COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE
பயிற்சிக் காலம்: 40 நாட்கள் கட்டணம்: 950/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
ஆரம்பம்: 28-10-88
[திங்கள், புதன், வெள்ளி] வகுப்புகள்
BASIC LANGUAGE கற்றவர்களுக்கான
● COMPUTER PROGRAMMING IN COBOL LANGUAGE
பயிற்சிக் காலம்: 3 மாதம் கட்டணம்: 1, 500/-
(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)
ஆரம்பம்: 29-10-88
(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM [Compatible] கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
● குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்களாகையால், விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.
UNIKCO COMPUTER CENTRE
No 5, மின்சார நிலைய வீதி,
2ஆம், ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)
(C-633)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கைலாசபிள்ளை கிருபாகரன்**
(யாழ் பல்கலைக்கழக மாணவன்)

ஆண்டவன் படைப்பு: 24 - 07 - 1967
அழிப்பு: 25 - 10 - 1987

அவலம் ஒன்று வந்து போய் - 'கிருபா'
ஆண்டொன்று முடிந்ததை நினைந்து
அழுவதை விடுத்து நாம் - எப்படி
அழகாக அஞ்சலி செய்வோம்?

உன் உயிரைப் பறிக்க வென்றே - இங்கு
ஓடிவந்ததோ யமன்?
நிரந்தரத்தில் நித்திரையானாய் -நீ
நித்தமும் அழுகின்றோம் மனதில் நாம்

வையத்துள் வாழ்ந்தது போதுமென்று
வானகம் சென்று விட்ட - 'கிருபா'
உன் ஆத்மா சாந்தியடைய - நாம்
உணர்ச்சியின்றி பிரார்த்திக்கிறோம்
துக்கத்துடன்

உன் பிரிவால் வாடும்
அப்பா, அண்ணா, உறவினர்கள்,
நண்பர்கள்.

கோப்பாய். (7426)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி முத்தம்மா சதாசிவம்**

திதி: 25 - 10 - 1988

ஓராண்டு முடிந்ததம்மா
எமை விட்டு நீ பிரிந்து
மாறாத துன்பத்தால்
நாளாந்தம் அழுகின்றோம்!
குருதியே வரலாறாய்
ஓடா நாடு இருந்திட்ட
பொல்லாத நாட்களைதை
புரியாது நாமுன்னை
விட்டுப் பிரிந்து பின்
வீடு வந்த வேளையிலே
காணவில்லை உன்னையம்மா
மனையினிலே என்றாலும்,
வந்திடுவாய் மீண்டும் நம்
மனைதேடி என்றே
திக்கெட்டும் விழிபுதைத்து
தெய்வமே நாமிருந்தும்
ஏமாற்றம் தானம்மா
எண்ணியதை அழுகின்றோம்!
இல்லாது நீ எங்கள்
இல்லமோ வெறிச்சோடி
போனதம்மா பொய்யல்ல
புவியுள்ள நாள் வரைக்கும் - எம்
நெஞ் மெனும் கடலை விட்டு
நீங்காது உன் நினைவு - உன்
ஆத்மா சாந்தியுற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பெருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

83/2; ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (7418)

## ALCOHOLICS ANONYMOUS-JAFFNA GROUP

குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு விரும்புகிறீர்களா? இது சம்பந்தமாக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

சந்திக்கும் நேரங்கள்;-
26- 10- 88 பி. ப. 3. 00, பி. ப. 5. 00

''சாந்திடம்''
21, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (7434)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் லலித்**
**நடேசு இராசேந்திரன் (சாந்தா)**

கடமை, சண்ணியம், கட்டுப்பாடுடைய லலித்

மலர்வு: 26-10-1964
உதிர்வு: 25-10-1985

**திதி: 25-10-1988**

வருடங்கள் இன்றோடு மூன்றாகி விட்டதே! ஒரு சேர வந்த லோறன்ஸ், சபா, ஜீவன் என்போர் உடன் பிறப்புக்களாய் உன்னோடு ஒன்றிவிட கடன் பட்டார் போல் கலங்கினோம் யாம். உன் பிரிவு எங்களை வாட்டுதையா! ஆரத் தழுவத் துடிக்கின்றோம்-உனை ஆறாது எம் நெஞ்சம் என்றும் - உம் அன்பு ஆத்மா சாந்தியடைய இறைவனை அடிபணிகின்றோம்.

உன் பிரிவால் உளம் வாடும்,
அப்பா, அம்மா,
சகோதரர்கள், மருமக்கள்.

''பூரண இல்லம்''
முள்ளியவளை. [7420]

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில்

# தவறான புகார்களால் பலர் துன்புறுத்தப்படுகின்றனர்

## அமைச்சர் தொண்டமானுக்கு இ. தொ. கா பொறுப்பாளர் புகார்

யாழ்ப்பாணம், அக் 25
தனிப்பட்ட கோபதாபங்களின் நிமித்தம் சிலர் தவறான புகார்களைச் செய்வதன் காரணமாக வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்ப்பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களில் சிலர் பாதுகாப்புப்படையினரின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வட மாநில பொறுப்பதிகாரி திரு எஸ். மதுரப்பிள்ளை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுக்கு இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இப்படியான செயல்கள் இனிமேல் நடைபெறாமல் இருக்கவும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவிப் பொது மக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கையைமேற்கொள்ளுமாறும் அவர் அமைச்சரைக் கேட்டிருக்கிறார்.

### புனருத்தாரண வேலைகள்

அராலி அக் 25
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான புனருத்தாரண வேலைகள் ரூபா 20 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. (இ-12)

## யாழ் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

24.10.88 இல் நடைபெற இருந்த வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 30-10-88 ஞாயிறு காலை 10மணிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

எனவே சகல அங்கத்தவர்களும் அன்றைய தினம் தவறாது சமுகந்தரவும்.

-தலைவர்.

(7437)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



**பொன்னுத்துரை பாலகிருஷ்ணன்**

ஆண்டவன் படைப்பு: 17. 03. 1958
அழிப்பு: 15. 09. 1988

உனது பிரிவால் நித்தம் நித்தம்
கண்ணீர் சிந்தும்

அப்பா, அம்மா, சகோதர
சகோதரிகள் மைத்துனர்கள்,
நண்பர்கள்.

தம்பாகலட்டி,
அளவெட்டி வடக்கு. (7541)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி செல்லாச்சி வேலுப்பிள்ளை**

தோற்றம்: 05 - 04 - 1905
மறைவு: 27 - 09 - 1988


அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியோர்க்கும் பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

26 - 10 - 88 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகின்றோம்

கணக்காளர் V. ராஜரட்ணம்
[Accountant]
Dr. V. பொன்னம்பலம்
வேலுப்பிள்ளை குடும்பத்தினர்

''பொன்னர் வளவு''
தொல்புரம்,
சுளிபுரம். (7547)

## ஓராண்டு நினைவஞ்சலி



கீரிமலை வீதி, காங்கேசன்துறையைச் சேர்ந்த
**அப்புத்துரை தம்பித்துரை மனைவி: த. சிறீதேவி**

பிள்ளைகள்:-

| சிவாஜினி, | சுபாஜினி, | கேதீஸ், | கோனேஸ், | தவநேசன் |
|---|---|---|---|---|
| (வயது-14) | (வயது-11) | (வயது-09) | (வயது-07) | (வயது-01) |

அழிப்பு: 06 - 11 - 1987
திதி: 25 - 10 - 1988

அப்பா! கள்ளம் கபடமற்ற உங்களது முகத்தைக் கண்டும்,
அம்மா; பச்சிளம் குழந்தைதனை கையில் ஏந்திக் கொண்டு
நீங்கள் கண்ணீர் சிந்திய வண்ணம் நின்றதைக் கண்டும்,

தம்பி, தங்கைகளே!

உங்கள் பால்வடியும் அந்தப் பிஞ்சு முகங்களிலிருந்து வடிந்து கொண்டிருந்த கண்ணீர் தனைக்கண்டுங் காலனுக்கு மனம் இரங்கவில்லையே! அன்புத் தெய்வங்களே! கன்னிப்பருவமதில் பத்தொன்பதையும், பதினேழையும் வயதாகக் கொண்ட எங்கள் இருவரையும் இங்கு கலங்கித் தவிக்கவிட்டு எங்கு தான் சமாதி அடையவைத்தனரோ உங்கள் ஏழுபேரையும்?

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கும்:
மகள்: த. சித்திராதேவி, மகள்: த. சுபத்திராதேவி,
அம்மா. மாமி. சகோதரர்கள், சகோதரிகள், மச்சான்மார்,
மச்சாள்மார், சகலன்மார், பெருமக்கள், மருமக்கள்.

மயிலிட்டி,
காங்கேசன் துறை (7427)

இலங்கை நூலகச் சங்கம்

# நூலகவியல்

## 1989 முதல் வருட வகுப்புக்கள்

### தை மாதம் ஆரம்பம்

தகைமை:

க பொ. த உயர்தரம் ஓர் அமர்வில் 3 சித்தியும், சாதாரண தரத்தில் ஆங்கில சித்தியும்:

நூலக ஊழியராயின்:

சாதாரண தரம் ஓர் அமர்வில் 6 சித்தியும் 3 வருட சேவையும்.

விண்ணப்பங்கள் முடிவு திகதி: 1988-11-11

## 1988 முதல் வருடப் பரீட்சை

1988-11-19, 20

விண்ணப்பங்கள் முடிவு திகதி: 1988 10-31

## இறுதிநிலை வகுப்புக்கள் 1989ஆம் ஆண்டு நடைபெறும்.

## இடைநிலைப் பரீட்சை 1988-10-29, 30

மேலதிக விபரங்கள்:-
கா. மாணிக்கவாசகர்
177, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

● பதில் வேண்டின் தபாற்தலை வேண்டும். (7433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொய்யாமொழி**

**குறள்:**
இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு

**பொருள்:**
'இவர் எமக்கு இத்தன்மையானவர். யாம் இவர்க்கு இத்தனமையுடையோம்!' என்று புனைந்துரைத்தாலும் நட்புச் சிறப்பிழந்து விடும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி: 24805
யாழ்ப்பாணம் 22073
25-10 1988 த. பெ இல 23


## அமைதி மீண்டும் தளிர்க்க....

இற்றைக்கு ஏழு எட்டு வருடங்களுக்கு முன்னர் தமிழர்கள் குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் செய்ததை இப்போது தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் பின்பற்றுகிறார்கள்!

1981 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும், தமது உயிர்ப்பாதுகாப்பைக் கருதி தமிழ் இளைஞர்கள் அடைக்கலம் தேடி புகலிடம் தேடி வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். தங்களை அகதிகளாக ஏற்றுத் தஞ்சம் அளிக்குமாறு கேட்டார்கள். பிறந்த நாட்டில் நீதி, நிவாரணம், மனிதாபிமானம் எதுவும் இன்றி அவர்கள் தொடர்ந்தும் இன்னற்படுகிறார்கள். தமிழர்களைப் பொறுத்த மட்டில் பாதுகாப்பும் மற்றும் உரிமைகளும் இன்னமும் கானல் நீராகவே உள்ளன.

தமிழர்களுக்கு ஏற்பட்ட கதி இப்போது தென்னிலங்கை வாழ் சிங்கள மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. உயிர்ப் பாதுகாப்பு இப்போது அவர்களுக்கும் நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது!

இனப்படுகொலை நடத்தப்பட்டபோது தமிழர்கள் தங்கள் உயிரைப் பாதுகாக்க என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதைச் சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். ஓர் இனத்தை அழித்து அதன் உரிமைகளை நசுக்கலாம் என அவர்களில் பலரும் நினைத்ததும் உண்டு.

இப்போது அவர்கள், தமிழர்கள் பட்ட அவஸ்தைகளையும், இன்னல்களையும், அனுபவிக்கிறார்கள்; உயிரைப் பாதுகாக்க வேற்று மண்ணுக்குப் புகலிடம் தேடி ஓடியதையும் தாங்களே உணர்கிறார்கள். ''தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்'' என்ற நிலையில் இப்போது அவர்கள் இருக்கிறார்கள்.

ஒருவனது உலக வாழ்க்கை அவனது உயிர் அந்த உயிருக்கு ஆபத்து வரலாம் என்ற பாதுகாப்பற்ற நிலை ஏற்படும் போது அவன் அந்த ஆபத்திலிருந்து விலகிக்கொள்ள நினைப்பது இயற்கை.

இன ரீதியான தாக்குதல்கள் நடத்தப்பட்டவேளை, அரசாங்கப் பாதுகாப்புப் படைகளே ''லைசென்ஸ்'' வழங்கப்பட்ட கொலைஞர்களாக மாற்றப்பட்டபோது, தமிழ் மக்களின் உயிர்ப்பாதுகாப்பு பூஜ்ஜியத்துக்கு வந்திருக்கும் என்பதை சிங்கள மக்கள் இப்போதாவது உணர்வார்கள் என நம்புகிறோம்.

தமிழர்கள் அனுபவித்த கொடுமைகளில் சொற்பத்தைத் தான் சிங்கள மக்கள் இப்போது அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் எனலாம். இனரீதியான தாக்குதல்கள் அல்லது வன்செயல்கள் தெற்கில் நடக்கவில்லை என்பதால் அவ்வாறே எடை போட வேண்டியுள்ளது. அரசியல் ரீதியான வன்செயல்களே இப்போது அங்கு நடக்கின்றன.

எதுவானாலும் ஒரு நாட்டின் பிரசைகள் வெளிநாடுகளுக்குப் புகலிடம் தேடிச் செல்லும் அளவுக்கு பாதுகாப்பு அல்லது அரசியல் சூழ்நிலை மோசமடைவது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

தமிழர்களுக்கு நேர்ந்த கதி தமக்கும் வந்துவிட்டது என்பதை உணர்ந்து, தமிழர்கள் தமது சுதந்திரத்தையும் உரிமைகளையும் பூரணமாக அனுபவிக்க வழிவிட்டு, சகோதரர்கள் போல வாழவேண்டும் என்ற உணர்வு சிங்கள மக்களுக்கு இப்போதாவது ஏற்பட்டால் மட்டுமே நாட்டில் அமைதியும், சமாதானமும் மீண்டும் தளிர்க்க முடியும். இல்லையேல் வடக்கில் ஒருபோதும், தெற்கில் மறுபோதும் எனத் தலையெடுக்கும் வன்செயல்களைத் தவிர்ப்பது கடினம். நாடு சீரழிந்து மக்கள் அழிந்தொழியும் நிலையே தொடரும்.

# இஸ்ரவேலுக்கு தொடர்ந்து உதவினால் பணயக் கைதிகளுக்கு தீங்கு ஏற்படும்

## அமெரிக்காவுக்கு தீவிரவாத இஸ்லாமிய அமைப்பு எச்சரிக்கை

பேரூட், அக் 24

அமெரிக்கப் பணயக் கைதிகளுக்கு தீங்கு விளைவிக்கப் போவதாக தீவிரவாத முஸ்லிம் கெரில்லாக்கள் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

இஸ்ரவேலுக்கு தொடர்ந்து உதவுவதை அமெரிக்கா நிறுத்தினால் மட்டுமே பணயக் கைதிகளுக்கு தீங்கு விளைவிக்கும் முடிவைத் தடுக்க முடியும். அத் தீவிரவாத முஸ்லிம் அமைப்பு நேற்று பேரூட்டில் செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு அனுப்பிய அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு இரண்டு அமெரிக்கர்களை பணயக் கைதிகளாக வைத்திருக்கிறது.

அவர்களில் ஒருவர் பத்திரிகையாளர் அவரின் பெயர் டெரி அண்டர்ஸன்.

செய்தி ஸ்தாபனத்துக்கு அனுப்பிய அறிக்கையுடன் அண்டர்ஸனின் படமும் இணைக்கப்பட்டிருந்தது.

கார்க் குண்டு ஒன்று வெடித்த சம்பவத்தில் 8 இஸ்ரவேலியப்படையினர் கொல்லப்பட்டனர் என்பதும்,

அதைத் தொடர்ந்து இஸ்ரவேலியப் போர் விமானங்கள் தென் லெபனானில் விமானக் குண்டு வீச்சை நடத்தியதும் தெரிந்ததே.

இக் குண்டு வீச்சில் 15 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

### கப்பல்கள் மோதின 2பேர் பலி 2 பேரைக்காணவில்லை

கிரேக்க துறைமுகம் ஒன்றில் சரக்குக் கப்பம் ஒன்றுடன் பயணிகள் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் மோதியதில் ஒரு மாணவியும் ஓர் ஆண் ஆசிரியரையும் காணவில்லை. என்று அறிவிக்கப்பட்டது.

கப்பல் மாலுமிகள் இருவர் உயிரிழந்தனர்-பரிபாஸ் என்ற துறைமுகத்தில் இச் சம்பவம் இடம் பெற்றது.

சரக்குக்கப்பல் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தது. இத்தாலியைச் சேர்ந்த 'ஜுபிட்டர்' என்ற பயணிகள் கப்பலே இதில் மோதியது.

பயணிகள் கப்பலில் பிரிட்டனைச் சேர்ந்த சுமார் 400 மாணவ மாணவிகள் உல்லாசப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். (எ)

## தேசியத்தை கேலி செய்தவர்கள் தேசிய அணியில் சேருவதா?

### குமரி அனந்தன் கேள்வி

சென்னை, அக். 24

தேசியத்தைக் கேலி செய்தவர்கள் தேசிய அணியில் சேரலாமா? என்று தி.மு.க வினருக்கு குமரி அனந்தன் கேள்வி கேட்டுள்ளார்.

சென்னையை அடுத்த அம்பத்தூர் இ. காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் குமரி அனந்தன் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

**பக்தி**

தேசியத்தையும் தெய்விகத்தையும் மதித்தது காங்கிரஸ் எந்தக்கடவுளை வணங்கினாலும் சரியே பக்தியே முக்கியம் என்றது காங்கிரஸ். அதனால் காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களில் ''அல்லா பரமபிதா, அரிஹரபிரம்மம், அருள் புத்தரே சரணம்'' என்று கடவுள் வாழ்த்துப் பாட காந்தியடிகள் வலியுறுத்தினார்.

ஆனால் தி.மு.கவோ கடவுள இல்லை என்றது ஸ்ரீரங்கநாதரையும் தில்லை நடராஜரையும் பீரங்கி வைததுப் பிளந்தெறிவது எந்நாளோ என்று முழங்கியது முதலில் அதற்கும் கூட்டம் சேர்ந்தது மக்கள் உண்மை உணர்ந்து கடவுள் பக்தியே சிறந்தது என்ற முடிவிற்த வரும்போது, ஓடாத திருவாரூர் தேரை ஓட்டினேம், கோவில் குளத்தில் தார் வாரினேம் என்று கூறியது தி.மு.க

**தேசிய அணி**

தேசியம்பேசியவர்களை ''திருவாளர் தேசியம்'' எனக் கிண்டல் செய்த தி.மு.க. இன்றே தேசிய அணி என்ற பெயரில் உலா வரும் சிலரோடு கூடிக்குலவுகிறது. வடவர் நம்மவரும் அல்ல. நல்லவரும் அல்ல என்றவர்கள், வடநாட்டுத் தலைவர்களுக்கு வரவேற்புக் கம்பளம் விரிக்கிறார்கள். இதைச் சுட்டிக்காட்டினால், ''தென்னகத்தைச் சார்ந்த என். டி. ராமராவ் தலைவராக இருக்கிறாரே அதனால் ஆதரிக்கிறோம்'' என்கிறார்கள்

ஆனால் குமரியில் கால் ஊன்றி, இமயத்தில் தலை நிமிர்ந்தது போல் பெருந்தலைவராய்த் திகழ்ந்த காமராஜரைத் தென்னவராக, தமிழ் மன்னவராக, நம்மவராக நினைக்காமல் தோற்கடித்தும், தூற்றிப் பேசியதும் தி.மு.க.தானே. காங்கிரஸ் என்றும் தேசிய சிந்தனையோடு தான் இருக்கிறது.

**தேவிலாலுக்கு வரவேற்பு**

கன்னடத்தைச் சேர்ந்த நிஜலிங்கப்பாவும், ஆந்திராவைச் சேர்ந்த சஞ்சீவரெட்டியும் காங்கிரஸ் தலைவராக இருந்து புகழ் பெற்றவர்கள் தான். காங்கிரஸ் சரித்திரத்தை 25 அத்தியாயம் எழுதிய பாரதி போல தமிழைப் போற்றித் தொழும் காங்கிரஸ் தெலுங்கையோ அம்மொழி பேசும் மக்களையோ வெறுத்தது இல்லை.

சேரன் ஒரு கால சோழன். வடக்கே இருந்த கனகனும், விசயனும் தமிழர் வீரத்தைப்பழித்தார்கள் என்பதால் படையெடுத்தார்கள். அதைத் தமிழ் ஆற்றல் என்றே அழைத்தார் இளங்கோவடிகள். தாய் மொழியை அவ்வாறு சிறப்பித்தார். அந்த முந்தையத் தமிழ் வழியில் வந்த உன்னிகிருஷ்ணனை அவமானப்படுத்திய தேவிலாலை என்ன செய்தது தி.மு.க? கனக விசயர் தலையில் கல் வைத்தமையால் நேரு தலையில கல் வைப்போம் என்றெல்லாம் பேசியவர்கள் தேவிலாலைக் கரம் கூப்பி வரவேற்றார்கள்.

ஆனால் அன்று இந்தியைக் காட்டிப் பெரும் புயலை எழுப்பியதால் பலர் தீக்குளித்து மாண்டார்களே அவர்களைத் திருப்பிப்பெற முடியுமா?

வசதிக்காக அரசியல் நடத்துவதே தி.மு.க.வின் பழக்கம் வளையாத கொள்கை என்று தி.மு.க.விற்கு எதுவும் கிடையாது என்பதை மக்கள் உணர்ந்து விட்டார்கள்.

இவ்வாறு குமரி அனந்தன் பேசினார் (எ-4)

## கெரில்லாக்களுக்கு மரணதண்டனை! காபூல் நீதிமன்றம் தீர்ப்பு!!

காபூல், அக். 24

14 பேரைப் பலி வாங்கிய குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு பொறுப்பானவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு ஆப்கன் கெரில்லாக்களுக்கு காபூல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

கடந்த மாதம் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது.

வேறு இரண்டு கெரில்லாக்களுக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாக சோவியத் 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இக் குண்டு வெடிப்புச் சம்பவம் பாகிஸ்தானில் வைத்துத் திட்டமிடப்பட்டது என்றும் அச் செய்தி ஸ்தாபனம் மேலும் அறிவித்தது. (எ)

## சோவியத் யூனியனில் மேலும் ஜனநாயக நடைமுறைகள்!

மாஸ்கோ, அக் 24

சோவியத் யூனியனில் ஜனநாயக நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்க கிரெம்ளின் தலைமைப் பீடம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமான சட்டமூலம் ஒன்றை நேற்று வெளியிட்டிருக்கிறது.

இதன்படி.

★ தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான கொள்கையுடையவர்களும் போட்டியிடலாம்.

★ தேர்தல் பிரசாரங்களை நடத்தலாம்.

★ இரகசிய வாக்கெடுப்பு மூலம் 2,500 பேர் கொண்ட யூனியன் நாடாளுமன்றம் ஒன்று தெரிவு செய்யப்படும்.

★ இந்த நாடாளுமன்றம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரையும் நாட்டைநிர்வகிக்கசிறிய நாடாளுமன்றம் ஒன்றையும் தெரிவுசெய்யும்.

இவற்றை உள்ளடக்கிய இந்தச் சட்டமூலம் அடுத்த மாதம் நடக்க உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படும். (எ)

## எண்ணெ விலை வீழ்ச்சி; மாநாடு தோல்வியில் முடிவு

மாட்ரிட், அக். 2

எண்ணெ விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவது பற்றி முடிவு எதுவும் எடுக்க முடியாமல்ஒபெக் நாடுகளின் மாநாடு நேற்று முடிவடைந்தது.

பதின்மூன்று எண்ணை உற்பத்தி நாடுகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டன.

ஈரான், ஈராக் ஆகிய நாடுகளுக்கு இடையே எண்ணை உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது பற்றிய விஷயத்தில் இணக்கம் ஏற்படாததாலேயே மாநாடு தோல்வியில் முடிவடைந்தாகக் கூறப்படுகிறது. (எ)

## மன்னார் மாவட்டத்தில் 2,430 விவசாயிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம் அக்-25

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம், இவ்வருடம் காலபோகத்தில் 2 ஆயிரத்து 430 பாதிக்கப்பட்ட சிறிய வறிய விவசாயிகளுக்கு விதைநெல், உரம் தென்னம் நாற்றுக்கள் போன்றவற்றை விநியோகித்து வருகின்றது.

இச்சங்கத்தின் செயற்திட்டங்களுக்கு 'செயர்' ஸ்தாபனம், சிறுவர் பராமரிப்பு நிதியம் (ஐ. இ). யாழ்ப்பாணம் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் அமைப்புகள் உதவி வருவது குறிப்பிடத்தக்கது

ஏற்கனவே மாந்வரி நெற்செய்கை நடை பெறும் பொற்கேணி. சிலாவத்துறை. இரணை இலுப்பைக்குளம், பாலம்பிட்டி, இலுப்பைக் கடவை, விடத்தல் தீவு போன்ற பகுதி விவசாயிகளுக்கு விதைநெல்லும் அடிஉரமும் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

பெரிய நீர்ப்பாசனத் திட்ட. விவசாயிகளுக்குக் குறிப்பாக முருங்கன் உயிலங்குளம், நானாட்டான் மாந்தைபகுதிவிவசாயிகளுக்கு அடுத்து வரும் சில நாட்களில் விதைநெல் அடிஉரமும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் துயர் துடைப்பு சங்கத்தின் ''சுழற்சி நிதி'' திட்டத்தின் கீழ் உதவி பெற்ற சிறிய, வறிய விவசாயிகள் 80 சதவீத மானோர் பணத்தை மீளச் செலுத்தியிருக்கின்றனர் இதனால் இம்முறை மேலும் 2 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சங்கம் நிதி செலவிட்டு வருவதாக அந்த அதிகாரி கூறினார் (உ)

### இலங்கை மட்டும் அன்றி

## தென் கிழக்காசிய நாடுகள் அனைத்துமே விளையாட்டுத் துறையில் பின்நிற்கின்றன

### பரிசளிப்பு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, அக் 25

இலங்கை மாத்திரமன்றி தென்கிழக்காசிய நாடுகள் எல்லாமே விளையாட்டுத்துறையில் பின் தங்கி உள்ளன.

யாழ் பல்கலைக்கழக புவியியல்துறைத்தலைவர் பேராசிரியர் பி பாலசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் அவர் உரையாற்றினார்.

விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. ராஜன் கதிர்காமர் தலைமை வகித்தார்.

பேராசிரியர் பேசியதாவது:-

தென்கிழக்காசிய நாடுகள் எலலாம் விளையாட்டுத்துறையில் பின் தங்கியுள்ளன. அண்மையில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டி முடிவுகளில் இருந்து நாம் இதனை அறிந்து கொள்ள முடியும்

''இலங்கையைப் பொறுத்தவரையில் 1980 ஆம் ஆண்டில் இருந்து விளையாட்டுத் துறையும், பொழுதுபோக்கு அம்சங்களும் அரசியல் ஸ்தரமின்மை காரணமாக பின் தங்கியுள்ளன''

''இலங்கையில் மன்னார், முல்லைத்தீவு வவுனியா, மட்டக்களப்பு. கண்டி, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் படிப்பை கைவிட்டு விலகும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது

இவ்வாறு வெளியேறும் மாணவர்களை முதலாளிமார் நன்றாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இம்மாணவர்களின் குடும்பங்கள் வறுமைமட்டத்தின் கீழ் இருப்பதால் குறைந்த வேதனத்தில் பணியாற்ற இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

''இந்நிலையை நீடிக்க விட்டால் வருங்கால சமுதாயம் மிகவும் பாதிக்கப்படும்''

இப்படி அவர் கூறினார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் வெளிவாரி பட்டப்படிப்பு வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இப்பகுதி மாணவர்களின் கல்வித்தரம் உயர்த்தப்படவேண்டும் எனவும் அவர் தமது உரையில் வேண்டிக்கொண்டார்.

கல்லூரி மாணவர்களுக்கு திருமதி இராஜலக்சுமி பாலசுந்தரம் பின்னை பரிசில்களை வழங்கினார்

செல்வன் என். நித்தியராஜன் நன்றியுரை ஆற்றினார். (இ-ரி)

## தொண்டர் ஆசிரியர் பாதிப்பு

சுன்னாகம், அக்.25

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஆசிரியர் பற்றுக்குறையால் பாதிக்கப்பட்டபோது வசதிக்கட்டண நிதி, பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதி என்பனவற்றின் மூலம் நியமிக்கப்பட்ட தற்காலிக ஆசிரியர்களே இந்த தொண்டர் ஆசிரியர்கள் ஆவர்.

அண்மையில் கல்வித் திணைக்களத்திலிருந்து வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. (ச-27)

## இளங்கோ வீதி

காரைநகர் பிரதான வீதியான ஆலடியில் இருந்து கோவளம் செல்லும் பாதை தற்போது விடுதலைப் புலிகளின தியாகியான இளங்கோவினது பெயர் சூட்டப்பட்டு இளங்கோ வீதி என அழைக்கப்பட்டு வருகின்றது. (இ-73)

## அராலியில்

அராலிப் பகுதியில் இரவு நேரங்களில் மின்சாரம் மிகக் குறைவாகக் கிடைப்பதால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## யோன் பொஸ்கோவில் வாணி விழா

யாழ்ப்பாணம், அக் 25

யாழ் புனித யோன் பொஸ்கோ பாடசாலை மண்டபத்தில் பாடசாலை இந்துமன்ற ஆசிரியர்கள் மாணவர்களால் வாணி விழாசிறப்பாகக் கொண்டாடப்பட்டது

விசேஷ நிகழ்ச்சிகளாக பொன். சுந்தரலிங்கம் கூட்டுப்பிரார்த்தனை நடத்தினார்

புலவர் ஈழத்து சிவானந்தன் சிறப்புரை ஆற்றினர். (இ)

## இன்னல்படும் மக்களுக்கு கைகொடுத்து உதவுவதில் சர்வோதயம் முன்னணியில்

### பாடசாலை கலைவிழாவில் பேச்சு

காங்கேசன்துறை, அக்25

''இன்னல்படும் மக்களின் பல்வேறு தேவைகளை அறிந்து அவர்களுக்கு கைகொடுத்து உதவுவதில்சர்வோதயம் முன்னணியில்திகழ்கிறது.

இந்த வகையில் எதிர்கால சந்ததியினரான சிறார்களின் கல்வி விருத்திக்காகவும்சர்வோதயம் பணியாற்றி வருகிறது. மக்களின் நல்வாழ்வேசர்வோதயத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்''

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற சர்வோதய பாலர் பாடசாலைகளின் கலைவிழா நிகழ்ச்சிகளில் கலந்து உரையாற்றிய வடபிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குனர் திரு. சி. சிவசுப்பிரமணியம் கூறினார்.

தெல்லிப்பழைப நோ. கூ. சங்கத் தலைவர் திரு எஸ். சிவமகாராசா தலைமையில் நடந்த இக்கலை நிகழ்ச்சியில் வலி வடக்கு உதவி அரச அதிபர் பிரிவைச்சேர்ந்த 15 பாடசாலைகள் பங்குபற்றின.

### முள்ளியவளை விவசாயிகளுக்கு பசளை விநியோகம்

முல்லைத்தீவு மாவட்ட றெட்பானா ஸ்தாபனத்தார் முள்ளியவளைப் பகுதி விவசாயிகளுக்கு பசளைவழங்கினர்.

றெட்பானா சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ் புவனேந்திரன் தலைமையில் விநியோகம் இடம் பெற்றது. (ஒ-92)

## ஆழ்ந்த கவலை அதிர்ச்சி

யாழ்ப்பாணம், அக் 25

தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு. சிவானந்தசுந்தரம் படுகொலை செய்யப்பட்டதற்கு கோண்டாவில் கிழக்கு பிரசைகள் குழுவின் விசேஷ நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் தெரிவிக்கப்பட்டது. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி கடற்றெழிலாளர் கவனத்திற்கு!
எம்மிடம்
ஜோன்சன், எவன்றூட்
வெளியிணை இயந்திரங்களையும்,
வலை, நூல், போயா
போன்ற கடற்றெழில் உபகரணங்களையும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
சென். அன்ரனீஸ் (2)
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

# உதயன்

25 - 10 - 1988 செவ்வாய்க்கிழமை

வெளியிணைந் இயந்திரங்கள்

ஜோன்சன்
எவன்றூட் (10H.P.)
நிதான விலையில்
25,500/-ற்கு வாங்
சேன். அன்ரனீஸ்
63. யூதாததேயு கோவில் வீதி
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

தமிழனின் விமோசனத்துக்காக

## ஆயுதம் ஏந்தாமல் போராடியவர்

# தலைவர் சிவானந்தசுந்தரம்

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

வடமராட்சி அக் 25
தமிழன் எங்கு சோர்வுற்றிருந்தானோ அவனைத்தன்பேச்சினால்தட்டி எழுப்பியவர் அமரர் திரு. சிவானந்தசுந்தரம் தமிழனுக்கு எங்கு அநீதி இழைக்கப்படுகிறதோ, அங்கு தன் பேச்சாற்றலால் அவனுக்கு விமோசனம் பெற்றுக் கொடுத்தவர் அவர்.

ஆயுதம்ஏந்திப் போராடவில்லை அவர். ஆனாலும் அதனைவிடத் தமிழரின் உள்ளக் கிடக்கையை வெளியிட்டுத், தவறுகளைச் சுட்டிக் காட்டி, அநீதி இழைத்த அனைவருக்கும் ஒரு சவாலாக அமைந்தவர் அவர்.

தவறுகளைச் சுட்டிக் காட்டி, தமிழனின் உரிமைக்காக ஆயுதம் ஏந்தாமலேயேபோராடியது தான் அவர்செய்த குற்றம் இந்தக் குற்றத்திற்கு தான் அவருக்கு இந்தத் தண்டனை.

இவ்வாறு நேற்றுமாலை திக்கம்முனை மைதானத்தில் நடைபெற்ற தமிழ் ஈழம் மக்கள் மன்றத்தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டத்தில் உரையாற்றிய மாணவர் ஒருங்கிணைப்புக்குழுப் பிரதிநிதி செல்வி மோகனு குறிப்பிட்டார்.

நேற்று மாலை அன்னாரின்பூதவுடல் இறுதிஊர்வலமாக எடுத்துவரப்பட்டதை அடுத்து பிற்பகல் சுமார் 3-20 மணியளவில் பிரஸ்தாப அஞ்சலிக்கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்டத்திற்கு வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் நாதன் தலைமை வகித்தார்.

பண்டிதர் பரந்தாமன் பேசும்போது

கடலலை என இங்கு திரண்டிருக்கும் இந்த ஆயிரக்கணக்கான மக்களைப் பார்க்கும் போது மக்களை நேசித்து, மக்களுக்காகவே மரணதண்டனை பெற்ற இம் மாவீரனை மக்கள் எவ்வளவு நேசித்தார்கள் என்பது புலனுகின்றது—என்றூர்.

ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு, மீனவர் சங்கத் தலைவர் தம்பியண்ணு, வல்வைப்பிரசைகள்குழு சார்பில் திரு. நடனசிகாமணி, மாணவர் ஒருங்கிணைப்புக்குழுக்களின் சார்பில் ரவி, வடிவேற்கரசன் ஆகியோர் இரங்கலுரை நிகழ்ந்தினர்.

இறுதியில் அமரரின் சகோதரர் டாக்டர் க. அழகானந்தசுந்தரம் நன்றியுரை வழங்கினுர்.

(ஒ-70-160-9)

## ஆரம்ப ஆசிரியர் இன்று கடமை ஏற்க வேண்டும்

யாழ்ப்பாணம் அக் 25
ஆரம்ப ஆசிரியர் தெரிவில் முதல் குழுவில் பயிற்சிபெற்று வெளியேறியவர்கள் தமது கடமையை இன்று பொறுப்பேற்க வேண்டும்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் வைத்து கடந்த ஒரு வாரமாக வழங்கப்பட்டு வந்தன.

702 பேர் இதுவரை நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் தமது கடமைகளை அந்தந்தப் பாடசாலைகளில் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

இன்று கடமையைப் பொறுப்பேற்கத் தவறுவோருக்கு கால அவகாசம் வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் ஒரு சில நியமனக் கடிதங்கள் இன்னும் பெறப்படாமலே இருப்பதாகவும், இவற்றை உரியவர்கள் இன்று காலைவந்து யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்று, பதவியைப் பொறுப்பேற்கும்படி பிரதம கல்வி அதிகாரி திரு. சோமசுந்தரம் அறிவித்துள்ளார்.

(ஒ 9)

### ஜேனிக்கு எம்.பி.பதவி:

## சபாநாயகர் இன்னும் முடிவு செய்யவில்லையாம்

கொழும்பு, அக் 25
திரு. ஜெனி டிமெல்லை புளத் சிங்கள தொகுதியின் புதிய எம். பியாக ஏற்றுக் கொள்வதா என்பது பற்றி சபாநாயகர் இன்னும் முடிவு செய்யவில்லை.

''சட்ட மா அதிபரின் சட்ட ஆலோசனையை எதிர்பார்த்து இருக்கிறேன்''— என்று சபாநாயகர் ஈ. எல். சேனநாயக்கா தெரிவித்தார்.

இதனிடையில்—

திரு. ஜெனிடிமெல்லை புளத் சிங்கள எம். பியாக ஏற்றுக் கொண்ட விஷயத்தில் தேர்தல் ஆணையாளர் சட்டத்தைச் சரியாக புரிந்து கொள்வதில் தவறு விட்டு விட்டார் என்று சட்டமா அதிபர் சபாநாயகருக்குத் தெரிவித்து இருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## தென் இலங்கையில் புதிய கெரில்லாக் குழு?

கொழும்பு, அக். 25
தென்இலங்கை வன்செயல்களின் பின்னுல் இன்னெரு அரசியல் சக்தி இயங்குகின்றதா?

இது குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிலங்கை நிலைமையை இன்னெரு அரசியல்குழு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திவருவதாகத் தகவல் கிடைத்திருப்பதாகப் பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிரணியைச் சேர்ந்த ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சி, தென் இலங்கையில் வன்செயல்களை நடத்த கெரில்லாக் குழு ஒன்றை அமைத்திருப்பதாகத் தெரிவிக்கும் கடிதங்கள் பாதுகாப்பு வட்டாரங்களுக்குக் கிடைத்திருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

## வணிகத்தளிர் வெளியீட்டு விழா

யா/திருக்குடும்ப கன்னியர் மட (ஆங்கிலப் பாடசாலை) வணிக மாணவ மன்றத்தினரால் ஒத்தி வைக்கப்பட்ட ''வணிகத்தளிர்'' வெளியீட்டு விழா இன்று நண்பகல் 12.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்ட அனைவரும் வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்ருேம்.

வணிக மாணவ மன்றம்,
திருக்குடும்பக் கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.
(7436)

## ஊரடங்கை மீறுவோரை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஊரடங்குச் சட்டம் நாளை புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும்

மேற்கு மாகாணத்தில் கொழும்பு மாநகரம், ஹோமகம, மகரகம, மொரட்டுவ, நுகெகொட, மவுண்ட்லவினியா, கடுவல, கொலன்னுவ ஆகிய பகுதிகளில் நேற்று நள்ளிரவு 12 மணிக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்றுமாலை 6 மணிக்கு நீக்கப்படும்,

கம்பஹா மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு 12 மணிககுக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று மாலை 6 மணிக்கு நீக்கப்படும்.

களுத்துறை மாவட்டத்தில் இன்று செவ்வாய் காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் கொண்டுவரப்பட்டு இன்று மாலை 6 மணிக்கு நீக்கப்படும்.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களைக் கண்ட இடத்தில் கடும்படி பாதுகாப்புப் படைகளுக்குக் கண்டிப்பான உத்தரவு இடப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிரான கிளர்ச்சி என்ற போர்வையில் பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவிக்கவும், பாதுகாப்புப்படை முகாம்களைத் தாக்கவும் சில சக்திகள் திட்டமிட்டிருப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளன.

தனிப்பட்டவர்களைக் கொல்லவும், வேலைகளைக் குழப்பவும் நாச சக்திகள் திட்டமிட்டுள்ளன.

மக்களின் விருப்பம் இன்றியே அவர்களை அரச எதிர்ப்பு என்ற போர்வையில் வன்செயல்களைச் செய்யத் தூண்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அவசர வேலைகளைக் கவனிப்பதற்கு பொது மக்களுக்கு ஊரடங்குப் பாஸ் வழங்கப்படும். அண்மையில் உள்ள பொலீஸ் நிலையங்களில் பாஸ்களை பெற்றுக் கொள்ளலாம்— என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் அரச எதிர்ப்புக் கிளர்ச்சி ஊர்வலங்கள் நடைபெறும் போது பாதுகாப்புப் படையினர் தங்கள் முகாம்களிலேயே தங்கி இருக்க வேண்டும் என்று ஏற்கனவே ஜே. வி. பி. யினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதேவேளை வீட்டுக்கு இருவரை போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளும்படியும் ஜே. வி. பி. கேட்டிருக்கிறது.

இதைப் புறக்கணிப்பவர்கள் தேசத்துரோகிகளாகக் கணிக்கப்பட்டு அதற்கான தண்டனை அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அது எச்சரித்திருக்கிறது.

அரசின் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் இம் மாதம் 25 ஆம் திகதி கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று கோரும் துண்டுப் பிரசுரங்களையும் ஜே. வி. பி. யினர் வெளியிட்டிருந்தனர்.

(அ-எ-ஒ)

## அம்பாறை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ணல் ஆனந்தவீரசேகரா எடுத்திருக்கிருர்.

பொலீஸ் திணைக்களத்துடன் சேர்ந்து இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது

ரிசேர்வ் பொலீஸ் படைக்கு முதலில் இவர்கள் சேர்க்கப்படுவர். அவர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படும் என்று பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட்பெரேரா தெரிவித்தார்.

இத் திட்டத்திற்குக் கல்வி அமைச்சு அங்கீகாரம் வழங்கியிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-எ)

## வடக்கு கிழக்கு...,

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நான் அங்கு போவேன்.

ஒன்றை மட்டும் கூறுவேன். என்னை அவர்கள் வேண்டும் என்றுல் மட்டுமே நான் அங்கு போவேன்.

நான் போவதை அவர்கள் எதிர்த்தால் நான் அங்கு போகமாட்டேன்.

நான் அவர்களை ஆள்வதற்குப் போகவில்லை. நான் அனுமதிக்கப்பட்டால், எனது திறமைக்கு ஏற்ப அவர்களுக்குச் சேவை புரியவே விரும்புகின்றேன்.

நான் என்னை அவர்கள் மீது திணிக்க மாட்டேன். வடக்கு, கிழக்கில் எமது நம்பகத்தன்மை அழிக்கப்பட்டுவிட்டது

ஆனுல் ஏதாவது ஓர் அளவில் சமாதானத்தை ஏற்படுத்த ஒவ்வொருவரும் நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு திரு. ஷெல்டன் ரணராஜா சொன்னுர். (ஒ-எ)

## பல்லாயிரம் மக்கள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
புக் குழுவினுல் பொறுப்பேற்கப்பட்ட பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இறுதி ஊர்வலம் வடமராட்சி பகுதியின் பிரதான வீதிகளான புலோலி, மந்திகை, மாலிசந்தி, நெல்லியடி, வதிரிசந்தி, நவிண்டில், உடுப்பிட்டி ஊடாக வல்வெட்டித்துறையை நோக்கிச் சென்றது.

வல்வெட்டித்துறைக்குச் சமீபமாகவைத்து வல்வைப்பிரசைகள் குழுத்தலைவர் மாணவர் ஒருங்கிணைப்புக் குழு போஷகர் ஆகியோரினுல் பூதவுடல் பொறுப்பேற்கப்பட்டது. பின்னர் கடந்த வருடம் அக்டோபரில் பலாலி இராணுவ முகாமில் வைத்துக் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்ட 12 விடுதலைப் புலிகளின் நினைவாக வல்வை தீருவில்திடலில் அமைக்கப்பட்ட தூபியின் முன்பாக அமைக்கப்பட்ட விசேட அரங்கில் பொது மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்டாது.

அங்கிருந்து பின்னர் சுமார் 3 மைல் நீளத்திற்கு நடைபவனியாக ஊர்வலம் புறப்பட்டு வல்வெட்டித்துறை சந்தி வழியாக ஊறணி, பொலிகண்டி, திக்கம் இன்பருட்டி, வியாபாரிமூலை, சுப்பர்மடம் கல்லூரி வீதி, ஓராம்கட்டைச் சந்தி, பருத்தித்துறை வீதி வழியாக மாலை 3.10 மணியளவில் திக்கமுனை மைதானத்தை வந்தடைந்தது.

இறுதி ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையான பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர்.

சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட இந்த இறுதி யாத்திரையில், வ. பி போ. சபையின் பருத்தித்துறை சாலையின் பத்து பஸ்களும், 50க்கு மேற்பட்ட தனியார் மினிபஸ்கள், வாகனங்கள் என்பனவும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இறுதி ஊர்வலத்தைத் தொடர்ந்து திக்கம் முனை மைதானத்தில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது

பின்னர் சுமார் 5.30 மணியளவில் அமரர் க. சிவானந்தசுந்தரத்தின் பூதவுடல் திக்கம் முனை மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த 12 அடி நீளமும், 12 அடி அகலமும், ஆறரை அடி உயரமும் கொண்ட சிதையில் வைக்கப்பட்டு, அன்னாரின் மகன் திரு. சி. ஜெயசுந்தரத்தினுல் பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீருக்கு மத்தியில்தீமூட்டப்பட்டது (ஒ-9-70-160)

## ஐ. தே. க....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நாயக்கா மேலும் சொன்னதாவது:

பொதுக் கூட்டங்களை நடத்தினுல் கொலை செய்யப்படுவர் என்று சுதந்திரக்கட்சி அமைப்பாளருக்கு யு. என். பி யும் ஐக்கிய சோசலிச அணியும் பயமுறுத்தல் கடிதங்களை அனுப்பி வருகின்றன.

ஜே. வி. பி யின் பெயரைப் பயன்படுத்தி இப் பயமுறுத்தற் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன

கூட்டங்களில் குண்டுகள் வீசப்படும் என்று பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அவற்றுக்கு மத்தியிலும் தேசப்பற்றுள்ளவர்கள் கூட்டத்துக்கு வந்துள்ளனர் உடனடியாக இந்த முட்டாள் தனமான பயமுறுத்தலை நிறுத்தாவிட்டால் திரு. பிரேமதாஸாவின் கூட்டங்கள் நடைபெருமல் தடுக்கப்படும்

இப்படி திரு. பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

## கோண்டாவிலில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
றதாம்.

வாள், எல். எம் ஜி. ரகத் துப்பாக்கி, கிரனேட் போன்ற ஆயுதங்களை இவர்கள் வைத்திருந்தனர். ஒருசிலர் சீருடைகள் தரித்து முகமூடி அணிந்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

கொள்ளையர்கள், சிறுவர்கள், வயோதிபர், பெண்மணிகளைக் கடுமையாகத் துன்புறுத்தியதாகவும் அறியவருகின்றது.

தாலிக்கொடிகள் உட்பட பெருமளவு நகைகளும் லட்சக்கணக்கான பணமும் கொள்ளையர்களால் அபகரித்துச்செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை அன்று இரவு எட்டு மணியளவில் கொக்குவில் நந்தாவில் பகுதியில் புகுந்த கோஷ்டி ஒன்று இங்குள்ள வீடுகளைக் கொள்ளையடிக்கச் சென்றதாம்.

ஆனுல் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் விழிப்படைந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து அந்தக் கொள்ளைக் கோஷ்டியைத் துரத்தி விட்டனர்.

கொக்குவில் அம்பட்டப் பாலம்வரை இந்தக் கொள்ளைக் கோஷ்டியை பொதுமக்கள் துரத்திச் சென்றதாகக் கூறப்பட்டது.

கோண்டாவிலில் கொள்ளை அடித்த கோஷ்டியே நந்தாவில் பகுதிக்கு வந்திருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது. எனினும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் அடிக்கடி கொள்ளைகள் நடைபெற்று வருவதால் மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

(அ-ஐ 69-51)

## 102 ஆசிரியர்களுக்கும் நவ. 10 முதல் சேவை முன் பயிற்சி

யாழ்ப்பாணம், அக்.25
அண்மையில் தெரிவான ஆரம்ப ஆசிரியர்கள் 42 பேருக்கும், விஞ்ஞான பட்டதாரிகள் 60 பேருக்குமான சேவைக்கால முன்பயிற்சிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நவம்பர் 30ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலேயே பயிற்சிநெறி மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த 23, 24ஆம் திகதிகளில் உதயனில் வெளியான பெயர்ப்பட்டியலில் உள்ளவர்கள் இந்தப் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## மீலாதுந் நபி தினம்

யாழ்ப்பாணம், அக். 25
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினமான மீலாதுந் நபி தினத்தை நேற்று நாடெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் விமரிசையாகக் கொண்டாடினர்.

(ஒ-9)

## உண்ணுவிரதியின் நிலைமை மோசம்

கொழும்பு அக் 25
பூஸா முகாமிலிருந்து நியூ மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட உண்ணுவிரதிகளில்ஒருவரான கனகு உதயகுமாரின் நிலை அபாயகரமானதாக இருப்பதாகத் தெரியவருகிறது.

இடம் மாற்றப்பட்ட தண்டிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை 47 ஆகும். இவர்களில் எண்மர் கடந்தவாரம் சாகும் வரை உண்ணுவிரதத்தை ஆரம்பித்தவர்கள் ஆவர்.

நியூமகஸின் சிறைச்சாலையிலும் அவர்கள் தொடர்ந்து உண்ணுவிரதமிருப்பர் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

(ஒ-எ)

## குடாநாடு.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அடைந்தது

யாழ்நகர், குருநகர், வண்ணூர்பண்ணை, நல்லூர், நாச்சிமார் கோவிலடி, தட்டாதெரு உள்ளடக்கிய நகரப் பகுதிகள் முற்றுகஸ்தம்பிதநிலை அடைந்தது.

கடைகள் மூடிக்கிடந்தன. சந்தைகள் கூடவில்லை. வாகனப்போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்தன.

அரச மருந்தகங்களுக்கும் நோயாளர் வரவு குறைவாக இருந்தது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடைகள் மூடப்பட்டும், போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டும் இருந்ததாகத் தகவல்கள் கிடைத்தன வீதிகளில் சனநடமாட்டமும் மிகக் குறைவாகக் காணப்பட்டது.

(ஒ-51)

## படையினர் அஞ்சலி

வடமராட்சி அக் 25
நேற்று நடைபெற்ற அமரர் சிவானந்தசுந்தரத்தின் இறுதிஊர்வலத்தின் போது அஙகாங்கே அமைதிப் படையினர் அவரின் பூதவுடலுக்குத் தமது இராணுவ மரியாதையுடன்கூடிய அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டனர்.

(ஒ-160-70-9)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் கந்தையா

(முன்னுள் நீர்கொழும்பு வர்த்தகர்)

ஆறுமுகம் கந்தையா 24-10-88இல் அகால மரணமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற திரு. திருமதி ஆறுமுகத்தின் அன்பு மகனும், காலஞ் சென்ற ராசம்மாவின் அன்புக் கணவரும், கிருஷ்ணசாமியின் மாமனுருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இதை உற்ருர் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ. கிருஷ்ணசாமி,
மூனுமலை வீதி,
மானிப்பாய். (7445)

## வல்லிபுரம் கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

திரு வல்லிபுரம் கணபதிப்பிள்ளை அவர்கள் 22-10-88 சனிக்கிழமை காலமானுர். இவர் காலஞ்சென்ற திருமதி இராசம்மா கணபதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி மேனகா சண்முகநாதன், பாஸ்கரன், திருமதி ரஜனி இராஜகுலேந்திரன், சிவாஜி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. சண்முகநான், திரு. இராஜகுலேந்திரனின் அன்புமாமனுரும், வைதேகியின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-10-88 இன்று செவ்வாய்க்கிழமை 1 மணிக்கு கோண்டாவில் மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் தயவுசெய்து உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு, தகவல்:
கோண்டாவில் மக்கள், மருமக்கள்
(7444)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 25-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 25th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org